கேள்வி-5

பதில்:- வெள்ள கோவில் பக்கம் உள்ள உடையார் அங்காளம்மன் கோவில் முன் மேல் முகப்பில் உள்ள அங்காளம்மன் காரை உருவம் 4 (நான்கு) கைகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அவள் வலது பக்கம் கைகளில் மேல் பாகத்தில் உள்ள கையில்  ← இம்மாதிரி சங்கு ஒன்று வைத்திருக்கிறாள். கீழ் பக்கம் உள்ள கையை  ← இம்மாதிரி மேல் நோக்கி வைத்திருக்கிறாள். தன் இடது கைகள் ஒன்றில் (மேல் கையில்)  ← இம்மாதிரி (கோடாரி போன்ற) ஒரு ஆயுதம் வைத்திருக்கிறாள். கீழ் பக்கம் உள்ள கையை  ← இம்மாதிரி கீழ் நோக்கி வைத்திருக்கிறாள். அவள் உருவத்தை சுமாராக வரைந்துள்ளேன் கீழே பாருங்கள்.




நான் வரைந்துள்ள அங்காளம்மன் மாதிரி உருவத்தில் அவள் முகம் சாந்தமாக இல்லை. கோபமாக இருப்பது போல் இருக்கிறது. கோவிலில் உள்ள உண்மை உருவத்தை பார்த்தால் —

மிகவும் சாந்தமாகவும், கருணையுள்ளம் கொண்டவளாகவும் தெரிகிறது. ஆனால், அவள் கைகளில் இரண்டில் ஒன்றில் சங்கும் மற்றொன்றில் ஆயுதமும் வைத்திருக்கிறாள். இது போருக்கு (சண்டைக்கு) தயாராகும் காட்சியாக தெரிகிறது. அவள் கைகளில் தாங்கியிருக்கும் பொருள்களுக்கும் அவளுடைய முகபாவனைக்கும் சம்மந்தமில்லாமல் செய்துவிட்டார் உருவம் செய்த சிற்பி. இசு ஏனோ தெரியவில்லை.

கோவில் முன் வலதுபக்கம் உள்ள ஆண்பூதம் தன்னுடைய வலது கையில் ஒரு சிறிய கத்தி வைத்திருக்கிறது. அது:-




தன்னுடைய இடது கையை சும்மா கால்மேல் வைத்துக்கொண்டிருக்கிறது. கோவில் முன் இடதுபக்கத்தில் ~~உள~~ உள்ள பெண்பூதம் தன்னுடைய வலது கையை சும்மா விரல்களை ~~மடக்~~ மடக்கிப் பிடித்திருக்கிறது. அதில் ஆயுதம் ஒன்றுமில்லை. இடது கையை ஆண்பூதம் போலவே சும்மா கால்மேல் வைத்துக் கொண்டிருக்கிறது.

மற்றபடி, இந்த அங்காளம்மன் கோவிலில் மாசமாதம் பொங்கல் வைத்து விசேஷம் நடத்தப்பட்டதாம். ஆனால், மடவிளாகம். அங்காளம்மன் கோவிலில் நடைபெறுவது போல் அக்கினிக்குண்டம் த மயானத்தில் வெள்ளாள ராசன் மனைவி உருவம் செய்து அதற்கு பூஜை செய்வது இதுபோன்ற சடங்குகள் எல்லாம் இங்கு நடத்துவது இல்லை.

இந்தக் கோவிலில் ஆண்பூதம் வலதுபக்கமும், பெண்பூதம் இடதுபக்கமும் வைக்கப்பட்டது புதிய தொன்றுமில்லை. இம்மாதிரி நிறைய கோவில்களில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இம்மாதிரி ஆண்பூதம் கோவிலின் முன் வலது பக்கமும், பெண்பூதம் இடதுபக்கமும் ஏன் வைக்கப்படுகிறது என்ற விபரம் புரியவில்லை.